பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

22 07 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கரின் ராஜினாமாவை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டுள்ளார்.

- எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- நாடு முழுவதும் சிபிஎஸ்இ பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான **NISAR** இம்மாதம் 30-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

- சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கரின் ராஜினாமாவை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டுள்ளார்.

அரசியல் சாசன பிரிவு 67-**A**-ன்படி அவரது ராஜினாமா விவரம் உள்துறை அமைச்சகத்தால் குடியரசுத் தலைவருக்கு முறைப்படி அனுப்பப்பட்டு உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மாநிலங்களவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, திரு ஜெக்தீப் தங்கர், உடல் நலம் பெற பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் மூலம் நாட்டிற்காக பணியாற்ற அவருக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டதாகவும் பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று காலை கூடியதும், குடியரசு துணைத்தலைவரின் ராஜினாமா, பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக, நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்ட மக்களவை, மீண்டும் கூடியபோதும் அமளி நீடித்ததால், பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையும் இதே பிரச்சினை காரணமாக முதலில் 12 மணி வரையிலும், பின்னர் இரண்டு மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, பீகார் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சியினர் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

<<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் கைத்தறி மற்றும் கைவினைப்பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக வடகிழக்கு மாநில விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

நாகாலாந்து, மிசோரம் மாநில முதலமைச்சர்கள் மற்றும் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் உள்ளிட்டோர் பங்கேற்ற ஆய்வு கூட்டத்தில் காணொலி வாயிலாக உரையாற்றிய திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, வடகிழக்கு மாநிலங்களின் கைத்தறி, கைவினைப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்படும் என்றார்.

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுச்சூழலை பாதுகாத்து, மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் உள்ள அனைத்து சிபிஎஸ்இ பள்ளிகளிலும் மாணவர்களின் பாதுகாப்பை அதிகரிக்கும் விதமாக கண்காணிப்பு கேமராக்களை கட்டாயம் பொருத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த கேமராக்கள் ஒலி-ஒளி பதிவு வசதி கொண்டதாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பள்ளியின் நுழைவு வாயில், வெளியேறும் வாயில், தாழ்வாரங்கள், படிக்கட்டுகள், வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கேண்டீன், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட இடங்களில் மேகரா பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கேமராக்களில் குறைந்தபட்சம் 15 நாள் பதிவுகள் இருக்கும்படி பராமரிக்கவும், தேவைப்படும்போது அவற்றை ஆய்வு செய்யும் வகையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான **NISAR** இம்மாதம் 30-ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நாசா நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியுள்ள இந்த செயற்கைக்கோள், **GSLV-F16** ராக்கெட் மூலம் செலுத்தப்பட உள்ளது.

இந்த செயற்கைக்கோள் 12 நாட்களுக்கு ஒருமுறை ஒட்டுமொத்த உலகையும் ஸ்கேன் செய்து, பருவநிலை, பகல்-இரவு பற்றிய புள்ளி விவரங்களை துல்லியமாக தெரிவிக்கும் என இஸ்ரோ செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பிரசார் பாரதி செய்திப்பிரிவுகளில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த அணுகுமுறை பின்பற்றப்படுவதாக அந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு கௌரவ் துவிவேதி தெரிவித்துள்ளார்.

கம்போடியாவில் நடைபெற்ற ஆசிய ஊடக மாநாட்டில் பேசிய அவர், இதன்மூலம், நேயர்கள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ற நிகழ்ச்சிகளை கேட்க முடியும் என்றார்.

உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளவும் இந்த அணுகுமுறை உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகள் பத்திரிகையாளர்கள், துல்லியமான செய்திகளை நேர்த்தியாகவும், விரைவாகவும் வழங்க உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேவ்ஸ் உச்சிமாநாடு படைப்பாளர்களுக்கு வருங்காலத்திற்கு ஏற்ப ஆயத்தமாவதற்கு வகை செய்துள்ளதாகவும் திரு கௌரவ் துவிவேதி கூறினார்.

<<<<<<>>>>>

தேசிய கொடி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1947-ஆம் ஆண்டு இதேநாளில் இந்திய தேசிய கொடி அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூறும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

"ஒரே நாடு – ஒரே கொடி : ஒன்றுபட்ட தியாகம் அமைதிக்கு உறுதி" என்பதே இந்த ஆண்டு கொடி தினத்தின் மையக்கருத்தாகும்.

<<<<<<>>>>>

இமாச்சலப்பிரதேசம், தெலங்கானா, உத்தராகண்ட் மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில இன்று கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கன், கோவா, ஹரியானா, ஜம்மு காஷ்மீரின் ஒரு சில பகுதிகளிலும் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ள அந்த மையம், அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசத்திலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும் என்றும் கூறியுள்ளது.

தலைநகர் தில்லியிலும் நேற்றிரவு முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழகத்தின் நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தேனி மாவட்டம் சுருளி அருவியில் நீர்வரத்து அதிகம் உள்ளதால், தொடர்ந்து நான்காவது நாளாக சுற்றுலாப்பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte – ராஜ்குமார் - 24 Sec.)***

<<<<<<>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் நான்கு பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன்பிடிக்க சென்ற இவர்களை சர்வதேச கடல் எல்லை அருகே கைது செய்த இலங்கை கடற்படையினர், மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து தேசிய அளவிலும், சர்வதேச அளவிலான போட்டிகளிலும் பங்கேற்க செய்யும் வகையில், மத்திய அரசு கேலோ இந்தியா திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ், தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த வாலிபால் வீரர், வீராங்கனைகளுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு எஸ் எம் குமரன் தெரிவித்துள்ளார்.

***(Voice Byte - குமரன் - 37 'Sec. )'***

<<<<<<>>>>>

நாட்டில் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தும் ஐந்து பேரில் ஒருவர் பெண் என்று பாரத ஸ்டேட் வங்கி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தற்போது இந்த வரியை ஒரு கோடியே 52 லட்சத்திற்கும் அதிகமானோர் செலுத்தி வருவதாகவும், இவர்களில் 14 சதவீதம் பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வருமானவரி செலுத்துவோரில் 14 சதவீதத்தினரும், வங்கிகளில் முதலீடு செய்துள்ளவர்களில் 40 சதவீதத்தினர் பெண்கள் என்றும் பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் **'Soumya Kanti Ghosh '**தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உலக மூளை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மனநலனை உறுதியாக பேணுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும்.

அனைத்து வயதினருக்கும் மனநலன் அவசியம் என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

<<<<<<>>>>>

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**Changzhou**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 8-21, 21-16, 23-21 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Koki Watanabe** -ஐ வென்றார்.

**<<<<<<>>>>>**

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 11-4, 11-2 என்ற செட் கணக்கில், கனடாவின் **Joelle Kim**-ஐ வென்றார்.

**<<<<<<>>>>>**